பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 12 வெள்ளிக்கிழமை 30.09.2022 கதிர் 216

உயர் பாதுகாப்புப் பிரதேசங்கள் பிரகடனம்:

## ஐக்கிய நாடுகள் சபையின் அதிருப்திக்குள் இலங்கை!




இலங்கையில் பொதுக் கூட்டங்களைத் தடைசெய்யும் வகையில் உயர் பாதுகாப்புப் பிரதேசங்கள் பிரகடனம்

☞2

## இரு ஆண்களின் சடலங்கள் மீட்பு!

நுவரெலியாவில் பரபரப்பு

நுவரெலியா மாவட்டம், வலப்பனை – குறுந்துஓயாவில் இருந்து இரு ஆண்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கைக்கு எதிராக மற்றுமொரு சர்வதேச குற்றச்சாட்டு முன்வைப்பு

ஐ.நா. மனித உரிமைகளுக்கான உதவி பொதுச் செயலாளர் அதிரடி



மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளுடன் ஒத்துழைத்ததற்காக இலங்கை மக்கள் பழிவாங்கல் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளுடன் ஒத்துழைத்ததற்காக இலங்கை உட்பட 42 நாடுகளில் உள்ள பலர் பழிவாங்கல் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உதவி பொதுச் செயலாளர் இல்சே பிராண்ட்ஸ் கெஹ்ரிஸ் கூறியுள்ளார்.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட பெண்களையும்,

☞2

# தமிழர்களைத் தொடர்ந்து ஏமாற்றாமல் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும்!

ரணில் அரசிடம் சம்பந்தன் வலியுறுத்து



'நாங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகின்றோம்; அதற்கான பேச்சை விரைவில் ஆரம்பிக்கப் போகின்றோம்' என்று கூறி தொடர்ச்சியாகத் தமிழ் மக்களை ஏமாற்றாமல், பேச்சுக்களை இதயசுத்தியுடன் இலங்கை அரசு நடத்த வேண்டும்.

☞2

## பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் கொலைச் சந்தேகநபர் உயிரிழப்பு

கம்பஹா – நெதகமுவ பகுதியில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வழங்கிய வாக்குறுதிகளை மீறும் அரசு: தேசிய பேரவையைப் புறக்கணிப்போம்

சஜித் அணி அறிவிப்பு



மக்கள் எழுச்சி ஏற்பட்டபோது வழங்கிய வாக்குறுதிகளை மறந்து அரசு செயற்படுகின்றது. பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடுவதை விடுத்து, அரசியல் நடத்தப்படுகின்றது. எனவே, தேசிய பேரவையைப் புறக்கணிக்கும் முடிவையே எமது கட்சி பெரும்பாலும் எடுக்கும்.

☞2

## சர்வதேச சமூகத்தைச் சமாளிக்கும் ரணிலின் நாடகமே தேசிய பேரவை

சாடுகின்றது ஜே.வி.பி.



சர்வதேச அழுத்தங்களைச் சமாளிப்பதற்கான ரணில் விக்கிரமசிங்கவின் நாடகமே தேசிய பேரவையாகும். அரசியல் நோக்கம் கொண்ட அந்தப் பேரவை பயனற்றதாகும்.

☞3

## 'ரணில் – ராஜபக்ஷ' அரசு தீர்வை முன்வைக்காது!

அடித்துக் கூறுகின்றார் சஜித்



தேசிய பிரச்சினைகளுக்கு ரணில் – ராஜபக்ஷ அரசு ஒருபோதும் தீர்வைக் காணமாட்டாது. மக்களை ஏமாற்றும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுக் காலத்தை இழுத்தடிப்பதுதான் இந்த அரசின் நோக்கம்.

☞2

## ராஜபக்ஷக்கள் மீண்டெழுவார்கள்

சுப்பிரமணியன் சுவாமி ஆரூடம்



நீங்கள் தோற்கவில்லை; நீங்கள் மீண்டெழுவீர்கள் – என்று முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டபாய ராஜபக்ஷ ஆகியோரிடம் நேரில் தெரிவித்தார்

☞2

காலாவதியான பொருள்கள் விற்பனை:

## 11 வர்த்தகர்களுக்கு அபராதம் விதிப்பு!

யாழ்ப்பாணத்தில் திகதி காலாவதியான பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த 11 வர்த்தகர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் (செப்டெம்பர்) 20, 21ஆம் திகதிகளில் யாழ். மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மாநகர சபைக்கு உட்பட்ட பலசரக்குக் கடைகள் பரிசோதனைக்கு

☞3

## யாழ்ப்பாணத்தில் 'ரிக்ரொக்' படுத்தும் பாடு; 10 சிறுமிகள் உளவளச் சிகிச்சைப் பிரிவில்

யாழ்ப்பாணத்தில் 'ரிக்ரொக்' செயலிக்கு அடிமையாகி, அதன்மூலம் காதல் வயப்பட்ட 10 சிறுமிகள் யாழ். போதனா மருத்துவமனையின் உளவளச் சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

☞2

## தமிழர்களை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் தமிழ் மக்களுடன் அரசு விரைவில் பேச்சை ஆரம்பிக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனிடம் வினவிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இதில் முதன்மையானது தேசிய இனப் பிரச்சினை.

1949ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் பல்வேறு விதமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தீர்வு விடயம் சம்பந்தமாகத் தமிழ்த் தரப்பினர் திறந்த மனதுடன் இலங்கை அரசுகளுடன் பேச்சை நடத்தியுள்ளனர்; ஒப்பந்தங்களையும் செய்துள்ளனர்.

கொழும்பிலும், சென்னையிலும், டில்லியிலும் மற்றும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற பேச்சுக்களின்போது நியாயமான கோரிக்கைகளை இலங்கை அரசுகளிடம் தமிழ்த் தரப்பினர் முன்வைத்திருந்தனர்.

ஆனால், அந்தக் கோரிக்கைகள் இலங்கை அரசுகளால் நிராகரிக்கப்பட்டிருந்தன. தமிழ்த் தலைவர்களுடன் செய்துகொள்ளப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தங்கள் இலங்கை அரசுகளால் கிழித்தெறியப்பட்டும் உள்ளன.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுடன் தீர்வு விடயம் தொடர்பில் 17 சுற்றுப் பேச்சுக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடத்தியிருந்தனர்.

18 ஆவது சுற்றுப் பேச்சுக்குச் சென்ற நாம், காத்திருந்து ஏமாந்து வந்தோம். அந்தப் பேச்சு மேசைக்கு மஹிந்த அரசு வரவில்லை.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசில் தீர்வுக்கான பேச்சை முன்னெடுக்கப் பலவிதமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அரசியல் சதியால் அவையும் தோல்வியும் முடிவடைந்தன.

ஆனபடியால், 'நாங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகின்றோம்; அதற்கான பேச்சை விரைவில் ஆரம்பிக்கப் போகின்றோம்' என்று இலங்கை அரசு தொடர்ந்து கூறி மேலும் எங்களைக் காத்திருக்க வைக்காமல், ஏமாற்றாமல் ஒரு முறையான ஒழுங்கின் பிரகாரம் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்; பிரச்சினைகளுக்கு விரைந்து நியாயமான தீர்வைக் காண வேண்டும்.

பிரச்சினைகளை அரசு விரைவாகத் தீர்க்காவிட்டால் உள்ளக சுயநிர்ணய உரிமை எமக்கு மறுக்கப்படுகின்றது என்றே அர்த்தம். அதன் நிமித்தம் வெளியக சுயநிர்ணய உரிமையை நாங்கள் நாட வேண்டி வரும் - என்றார்.

## இலங்கைக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண் மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புபவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யத் தொடர்ந்தும் ஐக்கிய நாடுகள் சபை பணியாற்றுவதாக பிராண்ட்ஸ் கெஹ்ரிஸ் ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் பேரவையில் நேற்று அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தபோது தெரிவித்துள்ளார்.

முக்கியமாக மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள் பழிவாங்கல் மற்றும் அச்சுறுத்தல்களை சந்தித்தார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுத்து வைத்தல் கட்டுப்படுத்தப்பட்ட சட்டத்தால் இலக்கு வைக்கப்படல் மற்றும் இணையங்கள் மூலம் அவர்கள் கண்காணிக்கப்பட்டனர்.

இந்தச் செயற்பாடுகள் காரணமாக, குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளில் உள்ளவர்கள் ஐக்கிய நாடுகளுடன் ஒத்துழைப்பதைத் தவிர்த்தனர் என்றும் இல்சே பிராண்ட்ஸ் கெஹ்ரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

பழிவாங்கலுக்கு எதிராக உறுப்பு நாடுகளின் உறுதிமொழிகள் வழங்கப்பட்டபோதும் பொதுமக்கள் தொடர்ந்தும் துன்புறுத்தப்படுகின்றார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை உட்பட்ட ஆப்கானிஸ்தான், பஹ்ரைன், பங்களாதேஸ், பெலாரஸ், பிரேசில், புருண்டி, கெமரூன், சீனா, கியூபா, சைப்ரஸ், ஜனநாயகக் குடியரசு கொங்கோ, ஜிபூட்டி, எகிப்து, குவாத்தமாலா, இந்தியா, இந்தோனேசியா, ஈரான் இஸ்லாமிய குடியரசு, இஸ்ரேல், கஸகஸ்தான், லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசு, லிபியா, மாலத்தீவு, மாலி, மெக்சிகோ, மொராக்கோ, மியான்மர், நிக்கரகுவா, பிலிப்பைன்ஸ், ரஸ்ய கூட்டமைப்பு, ருவாண்டா, சவுதி அரேபியா, தெற்கு சூடான், சூடான், பாலஸ்தீனம், தாய்லாந்து, துர்க்மெனிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம், பொலிவேரியன் குடியரசு வெனிசுலா, வியட்நாம் மற்றும் ஏமன் போன்ற நாடுகளிலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் பிராண்ட்ஸ் கெஹ்ரிஸ் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தடுத்துவைத்தல், கட்டுப்படுத்தப்பட்ட சட்டத்தால் இலக்கு வைக்கப்படல் மற்றும் இணையங்கள் மூலம் அவர்கள் கண்காணிக்கப்பட்டனர். அத்துடன் ஐக்கிய நாடுகளுடனான ஒத்துழைப்பைத் தடுக்கும் வகையில், நீண்ட கால சிறைத்தண்டனை அல்லது வீட்டுக் காவலில் பலர் வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னைய ஆண்டுகளைப் போலவே, பழங்குடி மக்கள், சிறுபான்மையினர் அல்லது சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை துறைகளுடன் பணிபுரிபவர்கள் அச்சுறுத்தல் மற்றும் பழிவாங்கல்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் இல்சே பிராண்ட்ஸ் கெஹ்ரிஸ் கூறியுள்ளார். ஐக்கிய நாடுகளுடனான ஒத்து ழைப்பைத் தடுக்கும் வகையில் நீண்ட கால சிறைத்தண்டனை அல்லது வீட் டுக் காவலில் பலர் வைக்கப்பட்டுள்ளனர். பழங்குடி மக்கள் சிறுபான்மையினர் அல்லது சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை துறைகளுடன் பணிபுரி பவர்கள் அச்சுறுத்தல் மற்றும் பழிவாங்கல்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் இல்சே பிராண்ட்ஸ் கெஹ்ரிஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த அத்துமீறல்கள் அனைத்தும் 2021 மே 1ஆம் திகதி முதல் 2022 ஏப்ரல் 30ஆம் திகதி வரையில் இடம்பெற்றுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ரணில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் தமிழ் மக்களுடன் அரசு விரைவில் பேச்சை ஆரம்பிக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களிடம் தெரிவித் துள்ளனர். இது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணில் - ராஜபக்ச அரசு விரைவில் கவிழப் போகின்றது. இந்தநிலையில், ஏதோவொரு வழியில் ஆட்சியைத் தக்க வைப்பதற்காகவே தேசிய பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு என்று கூறி மக்களை இந்த அரசு ஏமாற்றி வருகின்றது.

தீர்வு விடயம் தொடர்பில் பேச்சு விரைவில் ஆரம்பம் என்று ஜனாதிபதி பிரிட்டன் உள்ளிட்ட வெளிநாடுகளுக்குச் சென்று புலம்பெயர் இலங்கையர்களிடமும், வெளிநாட்டு முக்கியஸ்தர்களிடமும், வெளிநாட்டு ஊடகங்களிடமும் பொய்யுரைக்கின்றார். அவரின் பாணியில் பிரதமர் உள்நாட்டிலிருந்து பொய்யுரைக்கின்றார்.

வாயால் எதையும் சொல்ல முடியும். ஆனால், அதைச் செயலில் காட்ட வேண்டும். செயலில் இறங்க இந்த அரசுக்குப் பலம் இல்லை. இந்த அரசு கவிழும் நாளும் வெகுதொலைவில் இல்லை - என்றார்.

## பொலிஸாரின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம்பஹா - பஹலகம பகுதியில் கடந்த 20ஆம் திகதி வீடொன்றில் கொள்ளையிட்டு, நபர் ஒருவரைக் கொலை செய்தார் என்று சந்தேகிக்கப்படும் நபரே இவ்வாறு பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார்.

நெதகமுவ பகுதியிலுள்ள வீடொன்றில் மறைந்திருந்த சந்தேகநபரைப் பொலிஸார் இன்று அதிகாலை கைது செய்ய முயற்சித்துள்ளனர்.

இதன்போது சந்தேகநபர் கூரிய ஆயுதத்தால் பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முயற்சித்ததால், பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## ராஜபக்ஷாக்கள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினர் கலாநிதி சுப்பிரமணியன் சுவாமி. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நவராத்திரிப் பூஜை சிறப்பு வழிபாடு நேற்றுமுன்தினம் இரவு அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. இந்தச் சிறப்பு வழிபாட்டில், இந்திய அமைச்சரவை முன்னாள் அமைச்சரும் இராஜ்ய சபாவின் முன்னாள் உறுப்பினருமான கலாநிதி சுப்பிரமணியன் சுவாமி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வின் பின்னர் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருடன் சிநேகிதபூர்வ பேச்சு நடத்தியபோதே சுப்பிரமணியன் சுவாமி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் ஆணை பெற்று ஆட்சியில் வீறுகொண்டு நடந்த ராஜபக்ஷக்கள் ஏன் திடீரெனப் பதவிகளைத் துறந்தார்கள் என்பது இன்னமும் மர்மமாகவே உள்ளது. அதற்கான பதிலை உங்களிடம் (மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜ பக்ஷ) நான் கேட்க விரும்பவில்லை. ஆனால், நீங்கள் தோற்கவில்லை; நீங்கள் மீண்டெழுவீர்கள். இது உறுதி - என்றார்.

## உயர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படுவது தொடர்பில் தாம் கவனம் செலுத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் சுதந்திரத்துக்கான சிறப்பு அறிக்கையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சுதந்திரத்துக்கான சிறப்பு அறிக்கையாளர் கிளெமென்ட் நியாலெட் சோசி வால்வ் ருவிட்டர் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான மக்களின் உரிமைகளை இலங்கை அரச அதிகாரிகள் மதிக்க வேண்டும் மற்றும் எந்தவொரு கட்டுப்பாடுகளும் நியாயமானது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வழங்கிய......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினரும் எதிரணி பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

குறுகிய காலத்துக்கு அரசு ஒன்று நிறுவப்பட வேண்டும், அமைச்சரவை மட்டுப்படுத்தப்பட வேண்டும், பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும், குறுகிய காலப்பகுதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பன உட்பட முக்கிய பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இவற்றில் ஓர் அங்கமே தேசிய பேரவையாகும்.

தேசிய பேரவை அமைப்பதற்கே மூன்று மாதங்கள் எடுத்துள்ளன. அதற்கிடையில் ஆளுங்கட்சி அரசியலும் நடத்தி வருகின்றது. அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர், இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

போராட்ட காலத்தில் இருந்த அக்கறை தற்போது அரசிடம் இல்லை. எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டதாக அது கருதுகின்றது. குறிப்பாக கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைப் பதவி எதிரணிகளுக்கு வழங்கப்படும் என்று சபாநாயகர் உறுதியளித்தார். தற்போது அவர் முடியாது என்கின்றார்.

எனவே, தேசிய பேரவை குறித்தும் எமக்கு ஐயப்பாடு உள்ளது. எனவே, அதனைப் புறக்கணிக்கும் முடிவையே கட்சி பெரும்பாலும் எடுக்கும் - என்றார்.

## யாழ்ப்பாணத்தில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

அதீத அலைபேசிப் பாவனை காரணமாக இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் 16 சிறுவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் உளவளச் சிகிச்சைப் பிரிவில் பெற்று வருகின்றனர் .

அவர்களில் 10 பேர் சிறுமிகள். இவர்கள் 'ரிக்ரொக்' செயலியைப் பயன்படுத்தி காலப்போக்கில் அதற்கு அடிமையாகி, பின் அதன்மூலம் காதல் வயப்பட்டு உளநலம் பாதிக்கப் பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இதர 6 சிறுவர்கள், நாளின் கணிசமான பகுதியை அலைபேசிக்குள் தொலைத்துக் கொண்டவர்கள். அலைபேசிப்பயன்பாட்டில் இருந்து மீளமுடியாத நிலையில் அவர்கள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் .

அதீத அலைபேசிப் பாவனை தொடர்பில் மருத்துவர்கள் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்ற அதேநேரம் தொலைபேசிப் பாவனையும் அதன் ஆபத்துக்களும் மறுபுறம் கொஞ்சம் கொஞ்சமாக மாணவர்களையும் சிறுவர்களையும் விழுங்கி வருகின்றது .

அலைபேசிப் பாவனையால் சிகிச்சை பெறும் 16 பேர் இந்த வருடத்தில் மட்டும் சிகிச்சை பெறுபவர்களே. அத்துடன் இந்தப் பிரச்சினைக்குத் தாமாக முன்வந்து சிகிச்சை பெறுபவர்கள் மிகமிகக் குறைவே . எனவே, அலைபேசிப் பாவனையால் தம் உளநலத்தைத் தொலைத்த மாணவர்கள் சமூகத்தில் இன்னும் பல மடங்கு இருக்கலாம்.

பெற்றோர் தமது பிள்ளைகளின் அலைபேசிப் பாவனை தொடர்பில் உச்சபட்சக் கவனத்துடன் இருக்க வேண்டும் - என்றனர்.

- தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்:-
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொன்சேகாவின் மறுப்பு

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான இனப் படுகொலைகள் இடம்பெறவில்லை என 'வேலிக்கு ஓணான் சாட்சி என்பது போல' கருத்துத் தெரிவித்திருக்கின்றார் பீல்ட் மார்ஷல் சரத் தொன்சேகா.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக மிக மோசமான யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தாராளமாக இழைக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டு தமிழ் மக்களால் மாத்திரம் முன்வைக்கப்படவில்லை, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலினாலும், ஐ.நா. நடத்திய பூர்வாங்க விசாரணையிலும் அவதானிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட விடயம்தான் இது.

அந்தச் சமயத்தில் இலங்கை இராணுவத்துக்குத் தளபதியாக இருந்தவர் சரத் பொன்சேகதான். அதனால் இப்படி மறுத்துரைக்க வேண்டிய நிலைப்பாடு – கடப்பாடு – அவருக்கு இருக்கலாம்.

ஆனால், 'கணக்குப்பிள்ளை பேசக்கூடாது; கணக்குப் புத்தகம் பேச வேண்டும்' என்பார்கள். அதுபோல, இத்தகைய விடயங்களில் இராணுவத்துக்குப் பொறுப்பாக இருந்த தளபதி பேசக்கூடாது. சுயாதீன விசாரணை அந்த முடிவைத் தர வேண்டும். அதுதான் நியாயம்.

ஆனால், அத்தகைய விசாரணைக்கு யுத்தம் முடிந்து 13 ஆண்டுகள் கடந்த பின்னரும், அதற்கு இடமளிக்காமல், இனவழிப்பே இடம்பெறவில்லை என்று கணக்குப்பிள்ளைகள்தான் இங்கு பேசிக் கொண்டிருக்கின்றன.

'மடியில் கனமில்லை என்றால் வழியில் பயமில்லை' என்பார்கள். அந்த மாதிரி, யுத்தக் குற்றங்கள் இழைக்கப்படவே இல்லை என்றால் அது குறித்து விசாரிப்பதற்கு முட்டுக்கட்டை போட்டு, தடுத்து, பின்னடிக்க வேண்டிய தேவையே இல்லை.

யுத்தம் முடிவடைந்து இவ்வளவு காலத்துக்குப் பின்னரும், ஆதாரங்கள், ஆவணங்கள், சாட்சியங்கள் இல்லாமல் போய்விடவில்லை என்பது இனக் கொடூரம் புரிந்த தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதத்திற்கு மிக நன்கு தெரியும். அதனால் தான் இன்று வரை அத்தகைய விசாரணைக்கு இடமே அளிக்காமல் பம்மாத்துகாட்டி வருகின்றன தென்னிலங்கை அரசுகள்.

அரசியல் ரீதியாக அதிகாரத் தரப்புகள் இடையே போட்டி, மோதல், இழுபறி நீடித்தாலும் கூட, தமிழருக்கு இழைக்கப்பட்ட இனப்படுகொலை கொடூரம் தொடர்பான விடயங்களை ஒன்று சேர்ந்து மூடி மறைப்பதில் –மறுப்பதில் – அந்தப் பேரினவாதிகள் மத்தியில் அரசியல் அணி நிலை வேறுபாடுகளைக் கடந்த ஒற்றுமை உண்டு.

அதையே பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் பிரதிபலிக்கின்றார் என்பது திண்ணம்.

இனப்படுகொலை கொடூரங்களை நடக்கவில்லை என்ற தமது கருத்தியலில் அவர் உறுதியாக இருப்பாராயின், அதை நிரூபிப்பதற்கு இப்போது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலால் பல்வேறு தீர்மானங்கள் மூலம் பரிந்துரைக்கப்பட்ட சர்வதேச நீதி முறைமைக்கு அமைவான நீதி விசாரணை பொறி முறைக்குஇணங்கத்தாம்தயார்என்றுதுணிச்சலுடன் அறிவித்து, அதை எதிர்கொள்ளவும் அவர் முன் வர வேண்டும்.

படுகொலை கொடூரம் புரிந்த இராணுவத்தின் தளபதி அதை மூடி மறைத்து, கதை விடுவதில்தான் தேர்ந்தவராக இருப்பார். அதைத்தான் சரத் பொன்சேகாவும் செய்கின்றார். அவ்வளவுதான்.

## வலி.கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் நிரோஷிற்கு எதிரான மாவீரர் தின நினைவேந்தல் வழக்கு முடிவுறுத்தப்பட்டுள்ளது!

கடந்த ஆண்டு மாவீரர் தினம் நினைவேந்தல் தொடர்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்க்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டதுடன் வழக்கும் முடிவுறுத்தப்பட்டது.

மல்லாகம் நீதிமன்றில் கடந்த ஆண்டு மாவீரர் தினம் அனுஷ்டிப்புத் தொடர்பாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 28 ஆம் திகதி புதன்கிழமை மல்லாகம் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அந்தவழக்கில், அச்சுவேலிபொலிஸாரின் மேலதிக அறிக்கையின் பிரகாரம் கடந்த ஆண்டு இடம்பெற்ற மாவீரர் தின நினைவேந்தல்களில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் சட்டம் ஒழுங்கை மீறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி மல்லாகம் நீதிமன்றம் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை விடுவித்தது.

கடந்த (2021) மாவீரர் தினத்துக்கு முன்பாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருக்கு எதிராக அவர் உள்ளிட்டவர்கள் குற்றவியல் சட்டக் கோவை சரத்து 106 , பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் கொவிட் தொற்று சட்ட ஏற்பாடுகளையும் அறிவுறுத்தல்களையும் மீறி மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கின்றனர் எனத் தெரிவித்து, அதற்குத் தடை விதிக்குமாறு (வழக்கு இல ஏ.ஆர். 1577௪21) மன்றில் விண்ணப்பித்திருந்தனர்.

அதனை ஆட்சேபித்து கடந்த ஆண்டு சிரேஷ்ட சட்டத்தரணி சிறிகாந்தா தலைமையில் சட்டத்தரணி திருக்குமரன் உள்ளிட்ட குழாம் எதிர்த்து வாதிட்டிருந்தது.

அந்த வழக்கில், (கடந்த ஆண்டு) குற்றவியல் சட்டக்கோவையின் மேற்படி சரத்தின் பிரகாரம் குற்றம் இழைப்பதற்கான வலுவான சாட்சியங்கள் இணைக்கப்படவில்லை என்றும் அரசமைப்பு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நினைவு கூர்வதற்கான உரிமையை மறுக்க முடியாது எனவும் ஏற்கனவே வலுவில் உள்ள சட்ட ஏற்பாடுகளையும் வர்த்தமானி அறிவுறுத்தல்களையும் சகலரும் கடைப்பிடிக்க வேண்டியவர்கள் எனவும் தெரிவித்திக்கப்பட்டிருந்தது. மேலும், எவராவது சட்டத்தை மீறினால் பொலிஸார் கைதுசெய்ய முடியும் எனவும் பொலிஸாருக்கு மன்று தெரிவித்திருந்தது. அவ்வாறு நீதிமன்று தெரிவித்திருந்த நிலையில், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷிற்கு கடந்த 14 ஆம் திகதி மீளவும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை அனுப் பப்பட்டு வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கடந்த 14 திகதி வழக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது, வழக்கில் நிரோஷ் சட்டம் ஒழுங்கை மீறியுள்ளாரா என பொலிசாரிடம் நீதிபதியால் கேள்வி எழுப்பப்பட்டது.

இந் நிலையில் அடுத்த தவணையான புதன் கிழமை வழக்கு அழைக்கப்பட்ட போது மேலதிக அறிக்கையை அச்சுவேலி பொலிஸார் தாக்கல் செய்தனர். அதனை ஆராய்ந்த நீதிமன்றம் வழக்கு இனி அழைக்கப்படமாட்டாது எனத் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது.

## நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு சனத் நிஷாந்தவுக்கு அழைப்பாணை

ஒக்ரோபர் 13 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

பிரியலால் சிறிசேன மற் றும் விஜித குமார ஆகிய இரு சட்டத்தரணிகள் சமர்ப்பித்த முறைப்பாட்டின் பூர்வாங்க பரிசீலனையின் பின்னர், நிங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஆர்.குருசிங்க ஆகிய நீதிபதிகள் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (வியாழக்கிழமை) இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. நீதிமன்றத்தை அவமதித்தார் எனக் கூறி அவருக்கு எதிராக இரண்டு மனுக்கள் தாக்கல் செய் யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை 13 வருடங்களின் பின்னர் சந்தேக நபர் கைது!

கொஸ்கஹமுகலன பிரதேசத்தில் 15 வயதுடைய பாடசாலைச் சிறுமியை பலாத்காரம் செய்து கொலை செய்த வழக்கில் தேடப்பட்டுவந்த சந்தேகநபர் 13 வருடங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் அஹலியகொட பொலிஸாரால் பலீகல பிரதேசத்தில் வைத்து டி.என்.ஏ பரிசோதனையின் பின்னர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், சந்தேக நபர் நேற்று (வியாழக்கிழமை) அவிசாவளை மேல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

2009 ஆம் ஆண்டு அஹெலியகொட பொலிஸ்பிரிவிற்குட்பட்ட கொஸ்கஹமுகலன பிரதேசத்தில் பாடசாலை சீருடையுடன் வீட்டுக்கு வந்து கொண்டிருந்த பாடசாலை மாணவி ஒருவர் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

கொலையாளி தொடர்பான வழக்கு தற்போது அவிசாவளை மேல் நீதிமன்றில் நிலுவையில் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அஹலியகொட பிரதேசத்தை சேர்ந்த 39 வயதுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சர்வதேச..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் ஒடுக்கப்படுகின்றனர். அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது. மறுபுறத்தில் தனக்குத் தேவையான அரசியல் மற்றும் பொருளாதார நிகழ்ச்சி நிரலை அரசு முன்னெடுத்து வருகின்றது. இந்நிலையில், தேசிய பேரவை எதற்கு? பெயரளவில் மட்டுமே அது இருக்கப் போகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இல்லை. தற்போதைய அரசும் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஊழல், மோசடிகள் இடம்பெறுகின்றனர்.

எனவே, சர்வதேச மட்டத்தில் எழும் அழுத்தங்களை சமாளிப்பதற்காகவே ஆளுங்கட்சி தேசிய பேரவையைப் பயன்படுத்த முயற்சிக்கின்றது - என்றார்.

### காலாவதியான..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்படுத்தப்பட்டன.இதன்போது வண்ணார் பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 10 பலசரக்குக் கடைகளில் திகதி காலாவதியான பொருள்கள் அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கைப்பற்றப் பட்டன.

அத்துடன் நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும் ஓர் கடையில் திகதி காலாவதியான பொருட்கள் கைப்பற்றப் பட்டன.

மேற்படி கடை உரிமையாளர்களுக்கு எதிராக நேற்று யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்கை விசாரித்த நீதிவான் கடை உரிமையாளர்கள் 11 பேருக்கும் மொத்தமாக ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிட்டுத் தீர்ப்பளித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தென்கொரியாவிலிருந்து கமலா ஹாரிஸ் புறப்பட்டதும் மீள மிரட்டிய வடகொரியா!

## திரும்பவும் ஓர் ஏவுகணையைப் பரிசோதித்தது





சியோல், செப்.30

வடகொரியாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளத் தயாராகும் வகையில் அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் கடற்படைகள் கொரிய எல்லையில் கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டுவரும் நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக கடந்த 25 ஆம் திகதி குறுகிய தூரம் செல்லக்கூடிய பாலிஸ்டிக் ஏவுகணையை வடகொரியா சோதித்தது. இந்தப் பரபரப்பு அடங்குவதற்குள் வடகொரியா நேற்று முன்தினம் மீண்டும் ஏவுகணைச் சோதனையை நடத்தியது. இரண்டு குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணைகளை இவ்வாறு அது பரிசோதனை செய்தது.

தென் கொரியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் நேற்று முன்தினம், சியோல் சென்றடைந்தார். கமலா ஹாரிஸ் வடகொரியா மற்றும் தென்கொரியா நாடுகளை பிரிக்கும் எல்லைபகுதிகளைபார்வையிட்டபின், வடகொரியாவின் ஏவுகணை சோதனை குறித்து தென் கொரிய அதிபர் யூன் சுக்-யோல் உடன் கமலா ஹாரிஸ் ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர் கூறுகையில் -

வடகொரியாவின் ஏவுகணை சோதனை நிலையற்ற தன்மையை உருவாக்கிறது. வட கொரியாவின் மிருகத்தனமான சர்வாதிகாரம், பரவலான மனித உரிமை மீறல்கள் மற்றும் சட்டவிரோத ஆயுதத் திட்டம் ஆகியன அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலானவை. அமெரிக்காவும்தென்கொரியாவும் அணு ஆயுதங்களற்ற வடகொரியாவை விரும்புகின்றன - என்றார். வடகொரியா முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த ஆண்டு ஏவுகணைச் சோதனையை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டு தொடங்கியதில் இருந்து இப்போது வரை 30க்கும் அதிகமான ஏவுகணைகளை அது ஏவி சோதனை நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், கமலா ஹாரிஸ் தென்கொரியாவை விட்டு வெளியேறிய சில மணி நேரங்களுக்குள் வடகொரியா நேற்று மீண்டும் இரண்டு பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவியது. இதனால் கொரியவளைகுடாவில் பதற்றம் அதிகரித்துள்ளது.

# உக்ரைனின் பிராந்தியங்கள் இன்று ரஷ்யாவுடன் இணைவு:

## நான்கில் இரண்டு பிரதேசங்களுக்கு புடின் சுதந்திர பிரதேச அங்கீகாரம்




மொஸ்கோ, செப்.30


உக்ரைனில் ரஷ்யப் படைகள் வசம் உள்ள கெர்சன் மற்றும் ஜாபோர்ஜியா ஆகிய இரண்டு பிராந்தியங்களையும் சுதந்திர பிரதேசங்களாக அங்கீகரிக்கும் அதிகாரபூர்வமான ஆணையில் ரஷ்ய அதிபர் புடின் நேற்றுக் கையெழுத்திட்டார். தெற்கு உக்ரைனில் அமைந்துள்ள ஜபோர்ஜியா மற்றும் கெர்சன் பகுதிகளின் மாநில இறையாண்மை மற்றும் சுதந்திரத்தை அங்கீகரிக்க நான் உத்தரவிடுகிறேன், என்று அதிபர் புடின் ஆணையில் குறிப்பிட்டுள்ளார்.


உக்ரைனில் ரஷ்யப் படைகள் வசம் உள்ள லுஹான்ஸ்க், டொனெட்ஸ்க், கெர்சன் மற்றும் ஜாபோர்ஜியா ஆகிய நான்கு பிராந்தியங்களை அதிகாரபூர்வமாக தன்னுடன் இணைத்துக் கொள்ள ரஷ்யா முடிவு செய்துள்ளது. இந்த நிகழ்ச்சி இன்றையதினம் நடைபெறுகிறது. இதுதொடர்பாக அந்த நான்கு பிராந்தியங்களைச் சேர்ந்த மக்களின் விருப்பத்தைத் தெரிந்து கொள்ள ரஷ்யா அங்கு பொதுவாக்கெடுப்பை நடத்தியது. கடந்த 23 ஆம் திகதி தொடங்கி கடந்த திங்கள்கிழமை வரை இந்த வாக்கெடுப்பு நடந்தது.

நான்கு பிராந்தியங்களிலும் பெரும்பாலான மக்கள் ரஷ்யாவுடன் இணைவதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதைதொடர்ந்து உக்ரைனின் இந்த 4 பிராந்தியங்களையும் அதிகாரபூர்வமாக ரஷ்யாவுடன் இணைத்துக் கொள்வது தொடர்பான நிகழ்ச்சி இன்று ரஷ்ய அதிபர் மாளிகையில் கோலாகலமாக நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய அதிபர் மாளிகையில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்க நான்கு பிராந்தியங்களின் தலைவர்கள் ரஷ்ய தலைநகரில் கூடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுவதோடு அப்போது ரஷ்ய அதிபர் புடின் பொதுமக்களிடையே உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# அமெ. - ரஷ்யா அணு ஆயுத ஒப்பந்தம் விரைவில் நேரடிப் பேச்சு நடக்குமாம்!



மாஸ்கோ, செப்.30

ரஷ்யா மற்றும் அமெரிக்கா இடையே முக்கியத்துவம் வாய்ந்த அணு ஆயுதக்கட்டுப்பாட்டு ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து ஆய்வு செய்து வருவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. இந்த ஒப்பந்தம், இருதரப்பும் பயன்படுத்தக்கூடிய அணு ஆயுதங்களின் எண்ணிக்கை வரம்புகளை

தீர்மானிக்கவும், இருதரப்பும் ஒருவருக்கொருவர் அணு ஆயுதங்களை சரிபார்த்தல் மற்றும் ஆய்வு செய்வதற்கான விதிமுறைகளை அறிந்துகொள்வதற்கும் வெளிக் கொண்டு வருவதற்கும் ஏதுவாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா இது தொடர்பாக கூறுகையில், கொரோனாப் பெருந்தொற்றால் நிறுத்தி வைக்கப்பட்ட பேச்சுவார்த்தையை மீண்டும் தொடருவது குறித்து பரிசீலிக்கப்படுகிறது. முக்கியத்துவம் வாய்ந்த அணு ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் தொடர்பாக இருநாட்டு குழுக்களுக்கு இடையே நேருக்கு நேர் சந்திப்பு நடத்துவது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது என்று கூறினார்.

உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடங்கிய பின், ரஷ்யா மற்றும் அமெரிக்கா இடையே பல்வேறு துறைகளில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், இந்த ஒப்பந்தம் ரஷ்யா மற்றும் அமெரிக்கா இடையே நீடித்திருக்கும் சில முக்கியத்துவம் வாய்ந்த அரசாங்க ஒப்பந்தங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனுக்கு 12 பில்லியன் டொலர் அமெ. மேலும் உதவி வழங்குகின்றது


வொஷிங்டன், செப்.30

உக்ரைன் மீது ரஷ்யா ஆரம்பித்த போர் ஏழு மாதங்களை எட்டியுள்ள நிலையிலும் ரஷ்யாவுக்கு உக்ரைனும் சளைக்காமல் எதிர்த் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்தப் போரில் பொதுமக்கள் உள்பட ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். போரில் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் நிதி மற்றும் இராணுவ உதவியை அளித்து

வருகின்றன. போரினால் பாதிப்பு அடைந்துள்ள உக்ரைனுக்கு இராணுவ ஆயுத உதவிகளை அமெரிக்கா தொடர்ந்து வழங்கி வருகிறது.

இதற்கிடையே, இந்த மாத தொடக்கத்தில் 11.7 பில்லியன் டொலர்களை புதிய அவசர கால இராணுவ மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்காக உக்ரைனுக்கு வழங்குமாறு அமெரிக்க நாடாளுமன்றத்தை அந்நாட்டு அதிபர் ஜோ பைடன் கேட்டுக் கொண்டார்.

இந்த நிலையில், அதிபர் ஜோ பைடனின் வேண்டுகோளை ஏற்று போரினால் பாதிப்படைந்துள்ள உக்ரைன் நாட்டிற்கு பொருளாதார மற்றும் இராணுவ உதவிக்கு உதவும் வகையில் மேலும் 12 பில்லியன் டொலர்கள் நிதியுதவி வழங்க அமெரிக்க செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அர்மீனியாவுக்கு பினாகா ஏவுகணைகள் உள்பட இந்தியாவிடம் இருந்து பெருமளவு ஆயுதங்கள்!

## புதிய உலக ஒழுங்குக்கான அணிகள் சேருகின்றன



புதுடெல்லி,செப்.30

அர்மீனியாவுக்கு பினாகா ஏவுகணைகள் உள்பட இந்தியப் பணத்தில் 2 ஆயிரம் கோடி ரூபா பெறுமதி ஆயுதங்களை விற்பனை செய்ய இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சோவியத் குடியரசு வீழ்ச்சிக்கு பின் உருவான நாடுகள் அர்மீனியா மற்றும் அசர்பைஜான். இந்த இரு நாடுகளுக்கு இடையே நாக்ரோனா - கராபாக் என்ற மகாணத்தை மையமாக கொண்டு எல்லைப் பிரச்சினை நீடித்து வருகிறது. இந்த எல்லைப் பிரச்சினையில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

அந்த வகையில் கடந்த 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கி 6 வாரங்கள் நடைபெற்ற போரில் அர்மீனியாவின் கட்டுப்பாட்டில் இருந்த நாக்ரோனா - கராபாக் மாகாணத்தின் பெரும் பகுதியை அசர்பைஜான் கைப்பற்றியது. இந்தப் போர் ரச்க்யாவின் தலையீட்டால் முடிவுக்கு வந்தது. போர் முடிவுக்கு வந்தபோதும் தற்போது வரை அர்மீனியாக் -மீ அசர்பைஜான் இடையே அவ்வப்போது எல்லையில் மோதல் நீடித்து வருகிறது. இந்த மோதலில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தும் வருகின்றனர். இந்த சூழ்நிலையில் அர்மீனியாவுக்கு 2 ஆயிரம் கோடி ரூபா மதிப்பில் பினாகா ஏவுகணைகள் உள்பட உள்நாட்டில் தயாரிக்கப் பட்ட ஆயுதங்களை விற்பனை செய்ய இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது.

இதற்கு முன்னதாக அர்மீனியாவுக்கு கடந்த 2020 ஆம் ஆண்டு ரேடார் கருவிகளை வழங்கும் ஒப்பந்தம் செய்திருந்தது. ஆனால், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பினாகா ஏவுகணைகளை அர்மீனியாவுக்கு இந்தியா வழங்குவது இதுவே முதல்முறையாகும். இந்த ஏவுகணைகள் உள்பட இந்தியாவிடமிருந்து வாங்கும் ஆயுதங்களை அசர்பைஜானுடனான போரில் அர்மீனியா பயன்படுத்தும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. அர்மீனியாவுக்கு இந்தியா ஏவுகணை உள்ளிட்ட ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

அந்த வகையில், 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் உள்நாட்டில் உருவாக்கப்படும் ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் முயற்சியை இந்தியா தீவிரப்படுத்தியுள்ளது. அதன் ஒரு பகுதியாக ஏற்கனவே பிலிப்பைன்ஸ் இந்தியாவிடமிருந்து பிரமோஸ் ஏவுகணைகளை வாங்கியுள்ள நிலையில் அதேபோல் அர்மீனியாவுக்கும் பினாகா ரக ஏவுகணைகளை விற்பனை செய்ய இந்தியா முன்வந்துள்ளது.

மேலும், காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ள நாடுகளில் ஒன்று அசர்பைஜான். அதேபோல், கடந்த சில ஆண்டுகளாக துருக்கி இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ளது. துருக்கி மற்றும் அசர்பைஜான் ஆகிய நாடுகள் காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டையும் எடுத்துள்ளன அர்மீனியாவுடனான போரில் அசர்பைஜானுக்கு துருக் மற்றும் பாகிஸ்தான் ஆயுத உதவிகளை வழங் வருகின்றன. குறிப்பாக, துருக்கி அசர்பைஜானுக்கு அத க அளவிலான இராணுவ உதவி செய்து வருகிறது சமீபத்தில் ஐ.நா. பொதுக்கூட்டத்தில் பேசிய துருக்கி அத பர் காஷ்மீர் விவகாரத்தை மீண்டும் எழுப்பினார் அவரது பேச்சுக்கு கண்டனம் தெரிவித்த இந்தியா துருக்கிக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளது. மத்திய தரைக்கடல் பகுதியில் உள்ள தீவு நாடு சைப்ரஸ். இந்த நாட்டின் மீது படையெடுத்த அந்த தீவு நாட்டின் ஒரு பகுதியை துருக்கி கைப்பற்றி யுள்ளது. கிரேக்க மொழி பண்பாட்டை அதிக அளவில் பின்பற்றும் சைப்ரஸ் நாடு கிரீஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்புடையதாகும். இதன் காரணமாக சைப்ரஸ் தீவு விவகாரத்தில் கிரீஸ் மற்றும் துருக் இடையே ஏற்கனவே பிரச்சினை நிலவி வருகிறது காஷ்மீர் விவகாரத்தில் துருக்கி இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்த நிலையில் சமீபத்தில் இந்தியாவும் துருக்கிக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. அந்த வகையில் சைப்ரஸ் விவகாரத்தில் துருக்கிக்கு எதிரான நிலைப்பாட்டை இந்தியா எடுத்திருந்தது. தற்போது, போரில் அசர்பைஜானுக்கு துருக் ஆதரவாக உள்ள நிலையில் அர்மீனியாவுக்கு இந்தியா ஆயுத உதவிகளை வழங்குவதும் சர்வதேச கவனப் பெற்றுள்ளது.

இந்தப் போரில் ரஷ்யா அர்மீனிய ஆதரவு நிலைப் பாட்டில் இருந்து வரும் நிலையில் உக்ரைனுடனான போரால் இந்த விவகாரத்தில் ரஷ்யா மென்பை போக்கை கடைபிடித்து வருகிறது என்பது குறிப் பிடத்தக்கது. காஷ்மீர் விவகாரம் உள்பட பல பாகிஸ் தானுக்கு ஆதரவாகவும், இந்தியாவுக்கு எதிராகவும் துருக்கி மற்றும் அசர்பைஜான் செய்பட்டு வரும் சூழ்நிலையில் போரில் துருக்கி மற்றும் அசர்பைஜானுக்கு எதிராக அர்மீனியாவுக்கு ஆயுத விற்பனை செய்ய இந்தியா முன்வந்துள்ளது சர்வதேச அளவில் கவனப் பெற்றுள்ளது.

## தமிழ்நாடு, கேரளத்தை முடித்துக் கொண்டு கர்நாடகத்தில் ராகுல் காந்தி பாதயாத்திரை

ஊட்டி,செப்.30

கர்நாடகாவில் பாதயாத்திரையை தொடங்கிய ராகுல் காந்தியுடன் காங்கிரஸ் கட்சி முக்கிய நிர்வாகிகளும், தொண்டர்களும் பாத யாத்திரையாகச் சென்றனர்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி எம்.பி., பாரத ஒற்றுமையை வலியுறுத்தி கடந்த 7 ஆம் திகதி தமிழ்நாட்டின் கன்னியாகுமரியில் பாதயாத்திரை தொடங்கினார். தொடர்ந்து கன்னியாகுமரி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பாதயாத்திரை மேற்கொண்ட அவர் கேரள மாநிலத்திற்கு சென்றார். அங்கு கடந்த 11ஆம் திகதி தனது பாதயாத்திரையை தொடங்கினார். தொடர்ந்து மாநிலத்தில் திருவனந்தபுரம், கொல்லம், எர்ணாகுளம், மலப்புரம், திருச்சூர் மாவட்டங்களில் பாதயாத்திரை மேற்கொண்டு மக்களை சந்தித்துப் பேசி, அவர்களின் குறைகளையும் கேட்டறிந்தார். கேரளாவில் பாதயாத்திரை மேற்கொண்ட அவர் மீண்டும் நேற்று தமிழகத்தில் பாதயாத்திரை மேற்கொண்டார். நேற்று மாலை அவர் கேரள மாநி குலம் மலப்புரம் மாவட்டம் நிலம்பூர் வழியாக தமிழக மலை மாவட்டமான நீலகிரி மாவட்டம் கூடலூர் கோழிப்பாலத்திற்கு வந்தார். அங்கு அவரை காங்கிரஸ் கட்சி தலைவர் கே.எஸ்.அழகிரி தலைமையிலான கட்சியினர் திரண்டு வந்து உற்சாகமாக வரவேற்றனர். பின்னர் அவர் அங்குள்ள அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் வானில் சிறிது நேரம் ஓய்வெடுத்தார்.

தொடர்ந்து அவர் அரசு கலைக்கல்லூரியில் இருந்து தனது பாதயாத்திரையைத் தொடங்கினார். அவருக்கு முன்பாக பாண்ட் வாத்தியங்கள் முழங்க காங்கிரஸ் கட்சியினர் தேசியக் கொடியை ஏந்தியவாறு ஊர்வலமாக சென்றனர். சிலர் குதிரைகள் மீது அமர்ந்து தேசிய கொடியை ஏந்தி சென்றனர். நந்தட்டி, பள்ளிப்பாடி, செம்பாலா வழியாக கூடலூர் புதிய பஸ்நிலையம் பகுதிக்கு வந்த அவர் அங்கு நடந்த பொதுக்கூட்டத்தில் பேசினார். முன்னதாக அவர் வரும் வழியில் சாலையின் இருபுறமும் மக்கள் நின்று கொண்டு உற்சாக வரவேற்பு கொடுத்தனர். பழங்குடியின மக்கள் தங்களின் பாரம்பரிய இசை இசைத்தபடியும், நடனமாடி உற்சாக வரவேற்பு கொடுத்தனர். பொதுக்கூட்டம் முடிந்ததும் ராகுல்காந்தி கட்சி நிர்வாகிகளுடன் சிறிது நேரம் ஆலோசனை மேற்கொண்டார்.

பின்னர் அவர் இரவில் கூடலூரில் உள்ள தனியார் பள்ளி மைதானத்தில் வானிலேயே தங்கி ஓய்வெடுத்தார். கூடலூரில் பாதயாத்திரையை முடித்து கொண்ட ராகுல்காந்தி இன்று காலை கூடலூரில் இருந்து வானில் கர்நாடகாவுக்கு சென்றார். கர்நாடகாவில் அவர் தனது பாதயாத்திரையை தொடங்கினார். அவருடன் காங்கிரஸ் கட்சி முக்கிய நிர்வாகிகளும், தொண்டர்களும் பாத யாத்திரையாக சென்றனர்.

# காங்கிரஸ் தலைவர் தேர்தலில் மும்முனைப் போட்டி ஏற்படலாம்

## கார்கே, திக்விஜய்சிங், சசிதரூர் களத்தில்

காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கான வேட்பு மனுதாக்கல் இன்றுடன் முடிகிறது. வாக்குரிமை பெற்ற காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் 9 ஆயிரம் பேர் வாக்குப் போடுகிறார்கள்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைவர் பதவிக்கு 22 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக தேர்தல் நடத்தப்படுகிறது. காங்கிரஸ் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அடுத்த மாதம் () 17 ஆம் திகதி நடக்கிறது. இந்த தேர்தலில் சோனியாகாந்தி குடும்பத்தை சேர்ந்த யாரும் போட்டியிடவில்லை. காங்கிரஸ் தலைவர் தேர்தலில் ராஜஸ்தான் முதல்-மந்திரி அசோக் கெலாட்டுக்கும், 'ஜி23' தலைவர்களில் ஒருவரான முன்னாள் மத்திய மந்திரியும் தற்போதைய எம்.பி.யுமான சசிதரூருக்கும் இடையே போட்டி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதேநேரத்தில் காங்கிரஸ் தலைவர் தேர்தலில் அசோக் கெலாட்டுக்கு ஆதரவு அளிக்க காங்கிரஸ் மேலிடமும் முடிவு செய்தது. காங்கிரஸ் கட்சியின் புதிய கொள்கைபடி ஒருவர் ஒரு பதவியை மட்டுமே வகிக்க முடியும். ஆனால் அசோக் கெலாட் முதல்-மந்திரி பதவியை விட்டுக்கொடுக்க மறுத்தார். அதன்பிறகு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்று அசோக் கெலாட் அறிவித்தார்.

அசோக் கெலாட்டுக்கு பதிலாக வேறு ஒருவரை தலைவர் தேர்தலில் நிறுத்த அவர் முடிவு செய்தார். இது தொடர்பாக மூத்த நிர்வாகிகளுடன் சோனியா ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையில் காங்கிரஸ் தலைவர் பதவிக்கு போட்டியிடுவதில் மத்தியபிரதேச முன்னாள் முதல்-மந்திரியும், மேல்சபை எம்.பி.யுமான திக்விஜய்சிங், மல்லிகார்ஜுன கார்கே, குமாரி செல்ஜா, முகுல்வாஸ்னிக், மீராகுமாரி ஆகியோரின் பெயர்கள் அடிபட்டன.

இந்த நிலையில் காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டியிடப்போவதாக திக்விஜய்சிங் நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். நேற்று காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் இருந்து வேட்புமனுவையும் அவர் பெற்றார்.

மேலும் காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டியிடப் போகிறார் என ஏற்கனவே அறிவித்த சசிதரூரையும், திக்விஜய்சிங் நேற்று சந்தித்து பேசினார். இதுதொடர்பாக சசி தரூர் வெளியிட்ட டுவிட்டர் பதிவில், திக்விஜய்சிங் தலைவர் தேர்த லில் போட்டியிடுவதை வரவேற்கிறேன். நாங்கள் இருவரும் போட்டியிடுவது எதிரிகளுக்கு இடையே யான மோதல் அல்ல. சகாக்கள் இடையேயான நட்பு ரீதியிலான போட்டி தான் என்றார்.

காங்கிரஸ் தலைவர் பதவிக்கான தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில் கட்சியின் 'ஜி23' என்று அழைக்கப்படும் அதிருப்தி தலைவர்கள் சில நேற்று ஆலோசனை நடத்தினார்கள். டெல்லியில் உள்ள கட்சியின் மூத்த தலைவர் ஆனந்த் சர்ம இல்லத்தில் நடந்த இந்த ஆலோசனை கூட்டத்தில் பிருத்விராஜ் சவான், பூபிந்தர் ஹூடோ, மணீஷ் வாரி உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஜி23 தலைவர்கள் குழுவில் இடம் பெற்றிருக்கும் சசிதரூர் தலைவர் பதவிக்கு போட்டியிடுவது ஏற்கனவே உறுதியாகி உள்ள நிலையில் மணீஷ்திவாரியும் வேட்பு மனுதாக்கல் செய்ய ஆர்வத்துடன் இருப்பதாக கூறப்படுகிறது. ஆனால் இந்த தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கான வேட்பு மனுதாக்கல் இன்றுடன் முடிகிறது. எனவே இன்று திக்விஜய்சிங், சசி தரூர் ஆகியோர் மனுதாக்கல் செய்கிறார்கள்.

மேலும் காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரு மான மல்லிகார்ஜுன கார்கேயும் காங்கிரஸ் தலைவர் பதவிக்கு மனுதாக்கல் செய்யலாம் என்று கூறப்படுகிறது. எனவே காங்கிரஸ் தலைவர் தேர்தலில் மும்முனை போட்டி ஏற்பட வாய்ப்பு உள்ளது.

# கிழக்குப் பல்கலையில் பட்டமளிப்பு விழா வந்தாறுமூலையில் நாளையும் மறுதினமும்







கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 26ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நாளை முதலாம் திகதியும் நாளை மறுதினம் 2ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கிழக்குப்பல்கலைக்கழகம் ஆரம்பித்து 42 ஆவது ஆண்டை நினைவுகூரும் முகமாகப்

பிரகடனப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக வாரமான ஒக்டோபர் முதகாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெறும் முதலாவது நிகழ்வாக பல்கலைக்கழக பொதுப்பட்டமளிப்பு விழா இடம் பெறவுள்ளது.

கிழக்குப்பல்கலைக்கழக நல்லையா கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்தப் பொதுப்பட்ட மளிப்பு விழாவில் 2506 உள்வாரி, வெளிவாரி பட்டதாரி மாணவர்களுக்கும், பட்டப்பின் தகைமை மாணவர்களுக்கும் பட்டமளிக்கப்படும்.

இப்பட்டமளிப்பு நிகழ்வானது இவ்வருடத்தில் நடைபெறும் இரண்டாவது பட்டமளிப்பு நிகழ்வாகவும் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட வேந்தர் ஓய்வு நிலைப் பேராசிரியர் மாநாகப்போடி செல்வராஜா தலைமை வகித்து பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கும் முதலாவது நிகழ்வாகவும் அமைகின்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இலங்கைக் கான இந்திய உயர் ஸ்தானிகர் ஸ்ரீ கோபால் பாக்லேயும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ந.பஞ்சநாதமும் கலந்து கொண்டு சிறப்பு உரையாற்றவுள்ளார்கள்.

இம்முறை நடைபெறவிருக்கும் பட்டமளிப்பு நிகழ்வானது கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதிக மாணவர்களுக்கான பொதுப்பட்டமளிப்பு நிகழ்வாகும் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துட ன் முதன்முறையாக கிழக்குப் பல்கலைக்கழக தொழில் நுட்பம் மற்றும் முயற்சியாண்மையில் உயிர்முறைமை கள் தொழில்நுட்ப கௌரவ இளமாணி பட்டம் வழங்கப்படவிருப்பதும் சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வில் கலாநிதிப்பட்டம் (ஊணஜும்), முதுதத்து வமாணி (னிஊணஜுஷ்யி), விவசாய விஞ்ஞான முது மாணி MSc(Agric.), முதுகலைமாணி (MA), முதுகல்விமாணி(னிசி–), வணிக நிர்வாகத்தில் முது மாணி (MBA), அபிவிருத்திப் பொருளியலில் முது மாணி (MDE), முகாமைத்துவ பட்டப்பின் டிப்புளோமா ஆகிய 123 பட்டப்பின் தகைமைகளுக்கான பட்டங்களும். 263 இளமாணிப்பட்டங்களும் முதலாம் நாள் முதலாவது அமர்வில் வழங்கப்படவுள்ளன. ஏனைய இளமாணிப் பட்டங்களுக்காக 2 ஆவது அமர்வில் 313 பட்டதாரி மாணவர்களும், 3 ஆவது அமர்வில் 548 பட்டதாரி மாணவர்களும், இரண்டாம் நாள் நிகழ்வில் முதலாவது அமர்வில் 396 பட்டதாரி மாணவர்களும். 2 ஆவது அமர்வில் 549 பட்டதாரி மாணவர்களும், 3 ஆவது அமர்வில் 314 பட்டதாரி மாணவர்களும் பட்டமளித்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

பட்டமளிப்புநிகழ்வுகள் அனைத்தும் பல்கலைக்கழக இணையத்தளத்தினூடாக (ழழழ.ளவிஜ.ழிஉ.யிவ) நேரலையாக பார்வையிட முடியும் எனவும் தெரிவித்திருந்தார். இந்த. ஊடக சந்திப்பில் கிழக்கு பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் பேராசிரியர் கலிஸ்ரஸ் எலியாஸ் கருணாகரன், பட்டமளிப்பு விழா – 2021 இற்கான தவிசாளர் பொதுப் பேராசிரியர் மகேஸ்வரன் சிதம்பரேசன். பதிவாளர் அமரசிங்கம் பகீரதன், பிரதிப்பதிவாளர் திருமதி நிசாந்தினி நிருமிதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## எழுத்தாளர்கள் மேம்பாட்டுபாட்டுக்கான ஒன்று கூடல் நிகழ்வு அக்கரைப்பற்றில்!



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இளம் எழுத்தாளர்களுக்கான மேம்பாட்டுக் கூடல் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரண்யா சுதர்சனின் மேற்பார்வையின் கீழ், அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல் தௌபீக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின் வளவாளராக எழுத்தாளரும், பேஜஸ் புத்தக இல்லத்தின் அதிபருமான சிராஜ் மஷ்ஹூர்கலந்துகொண்டதோடு, அக்கரைப்பற்று கலாசார உத்தியோகத்தர் ஏ.எம்.தௌபீக், அக்கரைப்பற்று கலாசார அபிவிருத்தி உத்தியோ கத்தர் திருமதி நவப்பிரியா, ஆலையடிவேம்பு கலாசார உத்தியோகத்தர் ஜௌபர், முஸ்லிம் சமய, கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தின் கலாசார உத்தியோகத்தர் எம்.எச்.எம் முத்தார் மற்றும் இளம் எழுத்தாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்கள் தங்களது பேனாவை முரண்பாடு ஏற்படாமல் எவ்வாறு பயன்படுத்த வேண்டும். அதனை எப்படிப் பயன்படுத்தலாம். எழுதும் போது கையாள வேண்டிய முறைமைகள் மற்றும் நுணுக்கங்கள், எழுதுவதில் உள்ள தாற்பரியங்கள் போன்ற பலதரப்பட்ட விடயங்களையும் வளவாளராகக் கலந்து கொண்ட சிராஜ் மஷ்ஹூர் மிகத் தெளிவாக விளங்கப்படுத்தினார். அத்தோடு, செயற்பாட்டு ரீதியாகவும் இளம் எழுத்தாளர்கள் எழுப்பிய பல்வேறு சந்தேகங்களுக்கும் தெளிவை வழங்கினார்.







## முனைத்தீவு சக்தி மகா வித்தியாலயத்தில் ஆலோசனை வழிகாட்டல் அலகு திறப்ப

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு, பட்டிருப்பு, முனைத்தீவு சக்தி மகா வித்தியாலயத்தில் 'ஆலோசனை வழிகாட்டல் அலகு' பாடசாலை அதிப சுப்பிரமணியம்.உதயகுமாரால் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. தற்போதைய சூழ்நிலையில் மாணவர்களுக்கு ஆலோசனையும், வழிகாட்டலும் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. மாணவர்களுக்குப் பொருத்தமான ஆலோசனைகளையும் அதற்கான வழிகாட்டல்களையும் மேற் கொள்ள வேண்டுமாயின் அதற்கான தனியான அலகுடன் பொருத்தமான சூழ்நிலையும் காணப்படுதல் வேண்டும்.

இதுவரை பாடசாலையில் காணப்பட்ட வளங்களின் அடிப் படையில் ஆலோசனையும், வழிகாட்டலும் முன்னெடுக்கப்பட்டன இன்று பொருத்தமான சூழலைக் கொண்டதாக அதற்கான 'ஆலோசனை வழிகாட்டல் அலகு' திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர் திருமதி கீதா ரமேஸின் முயற்சியினால் 'ஆலோசனை வழிகாட் டல் அலகு' முன்னெடுக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொழும்பில் திறந்து வைக்கப்பட்ட புதிய அமெரிக்க மத்திய நிலையம்






கொழும்பிலுள்ள அமெரிக்க மத்திய நிலையம் (American Center)) புதிய அமெரிக்க தூதரக கட்டடத்துக்கு இடமாற்றம்செய்யப்பட்டுஅதன்நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்களுக்காக நேற்று (வியாழக்கிழமை) மீண்டும் திறந்துவைக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள புதிய சீரமைக்கப்பட்ட அமெரிக்க மத்திய நிலையம் அதன் நூலகப் புரவலர்கள், இளைஞர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் அதன் கடந்த கால நிகழ்ச்சிகளில் பங்குபற்றியோர், தற்போதைய நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவோர் மற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பங்காளர்கள் ஆகியோரை வரவழைத்து ஒரு வண்ணமயமான திறப்பு விழாவை நடத்தியது.

கொழும்பிலுள்ள புதிய அமெரிக்க மத்தியநிலையம், எதிர்காலத்தை வெற்றிகொள்வதற்குத் தேவையான திறன்களை இலங்கை இளைஞர்களுக்கு வழங்கும் ஒரு நோக்குடன், நூலகம் மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் இடமாகத் திகழ்வதிலிருந்து, ஒன்றிணைந்து கற்றல் மற்றும் டிஜிற்றல் ஈடுபாட்டுக்கான இடமாகவும், மெய்நிலை நிதர்சனம் (virtual reality)மற்றும் 3டி அச்சுப்பதிப்பு போன்ற தொழில்நுட்பங்களுக்கான ஒரு மிகநவீன அமைவிடமாகவும் திகழ்வதில் தனது முதன்மைக் கவனத்தை மாற்றியது.

அமெரிக்க மத்தியநிலையம் ஆங்கில மொழிப் பயிற்சி, மேடைப் பேச்சு, தொழில்முனைவு அபிவிருத்தி, குறியீட்டு முறை, இணையத்தள விருத்தி, ஊடக அறிவாற்றல், விஞ்ஞானம், தொழிநுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம் (STEAM) ஆகியவற்றுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்தும் இலவசமாக நடத்தும். இலங்கையின் இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அமெரிக்காவின் நண்பர்களுக்குத் தகவல்களை அணுகக்கூடிய, கருத்துக்களை வெளியிடுவதற்கான சுதந்திரம் கொண்டாடப்படும் மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை ஆதரிக்கும் ஓர் இடத்தை அது தொடர்ந்து வழங்கும்.

இந்தக் கொண்டாட்டத்தில் இணைந்துகொண்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங், அமெரிக்க மத்தியநிலையத்தின் புரவலர்களுடன் உரையாடியதுடன் பின்வருமாறு கருத்துரைத்தார். 'பெரும்பாலும் மெய்நிகர் நிகழ்ச்சிகளை நடத்திய மூன்று வருடங்களுக்குப் பின்னர், இந்த அழகான, நவீன இடத்தில் கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம் மற்றும் பரிமாற்றம் ஆகியவற்றின் பாரம்பரியத்தைத் தொடர முடிந்ததையிட்டு நானும் எனது குழுவும் பெருமையடைகிறோம்.

''வரவிருக்கும் வாரங்கள், மாதங்கள் மற்றும் ஆண்டுகளில் கனவுகள், நிகழ்ச்சிகள் மற்றும் மனநிறைவான எதிர்காலம் ஆகியவற்றை உருவாக்குவதற்காக புதிய மற்றும் பழைய நண்பர்கள் இவ்விடத்தில் ஒன்றிணைவதை நாம் காண்போம் என நம்புகிறேன். 'அமெரிக்காவும் இலங்கையும் பல பொதுவான விழுமியங்கள் மற்றும் அதிகளவு பொதுவான வரலாற்றைக் கொண்ட நண்பர்கள் மற்றும் பங்காளர்கள் என நான் அடிக்கடி கூறுவேன்.' எனக் கூறியதூதுவர்சங், 'இது அனைத்து இலங்கையர்களுக்கும் ஒரு சவாலான தருணம், எனினும் இலங்கை மக்கள், இருதரப்பு உறவின் முக்கியத்துவம் மற்றும் எமது இரு நாடுகளுக்கும் பொதுவான எதிர்காலம் ஆகியவற்றில் முதலீடு செய்வதை அமெரிக்கா தொடர்கிறது. அந்த பங்காண்மைக்கும், நட்புக்கும், மற்றும் எதிர்கால முதலீட்டிற்கும் இந்நூலகம் ஒரு சிறந்த உதாரணமாகும்!' – என்றார்.

தனது 73 வருட வரலாற்றில், அமெரிக்காவைப்பற்றியும் அதற்கு அப்பாலும் தகவல்களைத் தேடும் ஆயிரக்கணக்கான இலங்கையர்களை அமெரிக்க மத்தியநிலையம் வரவேற்றுள்ளது. இலக்கம் 44 காலி வீதியில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ ரம்யாவிற்கு இடமாற்றப்படுவதற்கு முன்னர் அமெரிக்க மத்தியநிலையம் முதன்முதலில் மலர் வீதியிலுள்ள Galle Face Court இல் அமைந்திருந்தது. காலப்போக்கில், கொழும்பிலுள்ள அமெரிக்க மத்தியநிலையத்தால் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் மற்றும் செயற்பாடுகளின் விரிவாக்கத்தின் காரணமாக, மத்தியநிலையம் புதிய அமெரிக்க தூதரக வளாகத்திலுள்ள அதன் தற்போதைய இடத்துக்கு மாற்றப்பட்டது.

# அக்கரைப்பற்றில் வியாழன் ஆயுள்வேத மருத்துவ முகாம்







(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்று, அலிகம்பை பிரதேசத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் வழிகாட்டலில் பிராந்திய ஆயுள்வேதப்பிரி வினால் ஆயுள்வேத மருத்துவ முகா மும் பாடசாலை மாணவர்களுக்கு போசணைத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரை யாடலும. கடந்த வியாழக்கிழமை நடாத்தப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனைப் பிராந்திய ஆயுள் வேதப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ. நபீல், சுகாதார தகவல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எம். முஜீப், ஆயுள்வேத பொறுப்பு வைத்திய அதிகாரிகளான டாக்டர் அப்துல் ஹை, டாக்டர் ரஜீஸ்,டாக்டர் அமீலா உள்ளிட்ட பிரிவுத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பங்குபற்றிய மக்கள் மாதம் இரண்டு தடவை தமக்கு சிகிச்சை வழங்குமாறு கேட்டுக் கொண்ட தற்கமைவாக பணிப்பாளரின் வழிகாட்டலில் அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என பிரதி பணிப்பாளர் இந்நிகழ்வில் கருத்து தெரிவிக்கும் போது உறுதியளித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.09.2022இல் வெளியிடப்பெற்றது.